## 2,23 கோடி குடும்ப அட்டை தாரர்களுக்கு

# பொங்கல் பரிசுத் தொகுப்புடன் ரூ.3000!

## வேட்டி, சேலைகளையும் வழங்கித் திட்டத்தைத் தொடங்கிவைத்தார் முதல்வர் மு.க.ஸ்டாலின்!

**சென்னை, ஜன.9-**

**தமிழர் திருநாளாம் பொங்கல் திருநாளை மகிழ்ச்சியுடன் கொண்டாடிட 2,22,91,710 அனைத்து அரிசி குடும்ப அட்டைதாரர்கள் மற்றும் முகாம்வாழ் இலங்கை தமிழர்கள் குடும்பங்களுக்கு தலா ஒரு கிலோ பச்சரிசி மற்றும் சர்க்கரை, முழுக் கரும்பு மற்றும் ரூ.3,000/ ரொக்கம் வழங்கும் திட்டம் மற்றும் 1 கோடியே 77 இலட்சத்து 64 ஆயிரம் சேலைகள், 1 கோடியே 77 இலட்சத்து 22 ஆயிரம் வேட்டிகள் வழங்கும் திட்டத்தை முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் வழங்கி தொடங்கி வைத்தார்.**

”தமிழர்களின் பழம்பெரும் பாரம்பரியத்தையும், பண்பாட்டையும் பிரதிபலிக்கும் விழாவாக பொங்கல் பண்டிகை தமிழ்நாட்டில் ஒவ்வொரு ஆண்டும் சிறப்பாகக் கொண்டாடப்படுகிறது. இந்நாள் அறுவடைத் திருவிழாவாகவும், இயற்கைக்கும், உழவர் பெருங்குடி மக்களுக்கும் அவர்தம்மோடு சேர்ந்து உழைத்த கால்நடைகளுக்கும், நன்றியையும், மகிழ்ச்சியையும் தெரிவிக்கும் விழாவாகவும் கொண்டாடப்பட்டு வருகிறது.

இத்தகைய சிறப்புமிக்க தமிழர் திருநாளாம் தைப் பொங்கல் திருநாளை மக்கள் அனைவரும் சிறப்பாகக் கொண்டாடும் வகையில், **தமிழ்நாடு அரசு 2,22,91,710 எண்ணிக்கையிலான அனைத்து அரிசி குடும்ப அட்டைதாரர்கள் மற்றும் இலங்கைத் தமிழர் மறுவாழ்வு முகாம்களில் வசிக்கும் குடும்பங் களுக்கும் பொங்கல் பரிசுத் தொகுப்பாக ஒரு கிலோ பச்சரிசி, ஒரு கிலோ சர்க்கரை மற்றும் ஒரு முழு நீளக்கரும்பு வழங்கப்படும் எனவும், பொங்கல் திருநாளை மேலும் சிறப்பாக கொண்டாட அனைத்து அரிசி குடும்ப அட்டைதாரர்கள் மற்றும் இலங்கைத் தமிழர் மறுவாழ்வு முகாம்களில் வசிக்கும் குடும்பங்களுக்கும் ரொக்கப் பரிசாக ரூ.3,000/ வழங்கப்படும்**” எனவும் முதலமைச்சர் அவர்கள் அறிவித்தார்கள்.

### வேட்டி சேலைகள் வழங்கும் திட்டம்!

**மேலும், பொங்கல் பண்டிகையையொட்டி வேட்டி, சேலைகள் வழங்கும் திட்டத்தினை செயல்படுத்திடும் வகையில், 1 கோடியே 77 இலட்சத்து 64 ஆயிரம் சேலைகள் மற்றும் 1 கோடியே 77 இலட்சத்து 22 ஆயிரம் வேட்டிகள் வழங்கிட தமிழ்நாடு அரசால் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு, இத்திட்டத்தின் மூலம் மக்கள் பயன்பெறுவதோடு, கைத்தறி, விசைத்தறி தொழில்களில் ஈடுபட்டுள்ளோருக்கு வேலைவாய்ப்பும் வழங்கப்படுகிறது.**



முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று (8.1.2026) சென்னை, பட்ரோடு நியாய விலைக் கடையில், பொங்கல் பரிசாக ஒரு கிலோ பச்சரிசி, ஒரு கிலோ சர்க்கரை, முழுக் கரும்பு மற்றும் ரூ.3,000/– ரொக்கம் ஆகியவற்றை வழங்கிடும் பணியினை தொடங்கி வைப்பதன் அடையாளமாக, அரிசி குடும்ப அட்டைதாரர்களுக்கு பொங்கல் பரிசுத் தொகுப்பினையும், வேட்டி, சேலைகளையும் வழங்கி, தொடங்கி வைத்தார். இந்நிகழ்ச்சியில், அமைச்சர்கள் கே.ஆர்.பெரியகருப்பன், தா. மோ.அன்பரசன், அர.சக்கரபாணி, மா. சுப்பிரமணியன், நாடாளுமன்ற மக்களவை கழகக்குழுத் தலைவர் டி.ஆர்.பாலு, திருமதி தமிழச்சி தங்கபாண்டியன் எம்.பி., சட்டமன்ற உறுப்பினர்கள் அரவிந்த் ரமேஷ், இ.கருணாநிதி, துணை மேயர் மு.மகேஷ்குமார், தமிழ்நாடு பாடநூல் கழகத் தலைவர் திண்டுக்கல் லியோனி மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

அதன்படி, பொங்கல் பரிசாக ஒரு கிலோ பச்சரிசி, ஒரு கிலோ சர்க்கரை, முழுக் கரும்பு மற்றும் ரூ.3,000/ ரொக்கம் ஆகியவற்றை வழங்கிடும் பணியினை தொடங்கி வைப்பதன் அடையாளமாக, முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (8.1.2026) சென்னை, பட்ரோடு நியாய விலைக் கடையில் அரிசி குடும்ப அட்டைதாரர்களுக்கு பொங்கல் பரிசுத் தொகுப்பினையும், வேட்டி, சேலைகளையும் வழங்கி, தொடங்கி வைத்தார்.

### முதல்வருக்கு பொதுமக்கள் நெஞ்சார்ந்த நன்றி!

முன்னதாக, பொங்கல் பரிசுத் தொகுப்பு வழங்கிட வருகை தந்த முதலமைச்சர் அவர்களுக்கு பொதுமக்கள் உற்சாக வரவேற்பு அளித்தனர். மேலும், பொங்கல் பரிசுத் தொகுப்பு மற்றும் இலவச வேட்டி, சேலைகள் பெற்றுக் கொண்ட பொதுமக்கள் முதலமைச்சர் அவர்களுக்கு தங்களது நெஞ்சார்ந்த நன்றியினையும் பொங்கல் வாழ்த்துகளையும் தெரிவித்துக் கொண்டனர்.

இத்திட்டத்தின் மூலம், தமிழ்நாடு முழுவதும் அனைத்து அரிசி குடும்ப அட்டைதாரர்கள் மற்றும் இலங்கை தமிழர் மறுவாழ்வு முகாம்களில் வசிக்கும் குடும்பத்தினர் பயன்பெறுவார்கள். பொங்கல் பரிசுத் தொகுப்பு, ரொக்கப் பரிசு மற்றும் வேட்டிசேலைகள் ஆகியவை மொத்தம் 7604 கோடியே 29 இலட்சத்து 47 ஆயிரத்து 959 ரூபாய் செலவில் வழங்கப்படுகிறது.

இப்பொங்கல் பரிசினை பெற்றிட அரிசி குடும்ப அட்டைதாரர்கள் அதிக எண்ணிக்கையில் நியாய விலைக் கடைகளுக்கு ஒரே நேரத்தில் வருவதை தவிர்த்திட, நாள் மற்றும் நேரம் குறிப்பிடப்பட்டு டோக்கன் வழங்கப்பட்டுள்ளது. அதில் குறிப்பிடப்பட்டுள்ள நாள் மற்றும் நேரத்தில் அக்குடும்ப அட்டைதாரர்கள் பொங்கல் பரிசினை பெற்றுக் கொள்ள கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

### மாவட்டங்களில் அமைச்சர்கள் தொடங்கி வைத்தனர்!

தமிழ்நாடு முழுவதும் உள்ள நியாய விலைக்கடைகளில் நேற்று (8.1.2026) முதல் 12.1.2026 வரை பொங்கல் பரிசுத்தொகுப்பு அனைத்து அரிசி குடும்ப அட்டைதாரர்களுக்கும் வழங்கப்படும். அந்தந்த மாவட்டத்தில் அமைச்சர் பெருமக்கள், நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள் இத்திட்டத்தினை தொடங்கி வைக்கின்றார்கள்.

பொங்கல் பண்டிகைக்கு முன்னதாக ரொக்கப் பரிசும், பொங்கல் பரிசுத் தொகுப்பும், வேட்டி சேலைகளும் அரிசி பெறும் குடும்ப அட்டைதாரர்களுக்கும் வழங்கும் வகையில் கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறையின் மூலம் அனைத்து ஏற்பாடுகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

### அமைச்சர்கள் பங்கேற்பு!

இந்நிகழ்ச்சியில், கூட்டுறவுத் துறை அமைச்சர் கே.ஆர்.பெரியகருப்பன், குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ.அன்பரசன், உணவு மற்றும் உணவுப்பொருள் வழங்கல் துறை அமைச்சர் அர.சக்கரபாணி, மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா. சுப்பிர மணியன், நாடாளுமன்ற உறுப்பினர் டி.ஆர்.பாலு, திருமதி தமிழச்சி தங்கபாண்டியன், சட்டமன்ற உறுப்பினர்கள் அரவிந்த் ரமேஷ், இ.கருணாநிதி, துணை மேயர் மு.மகேஷ்குமார், தமிழ்நாடு பாடநூல் கழகத் தலைவர் திண்டுக்கல் ஐ.லியோனி, தலைமைச் செயலாளர் நா.முருகானந்தம், கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை செயலாளர் டாக்டர். கே.சு.பழனிசாமி, கூட்டுறவு சங்கங்களின் பதிவாளர் க.நந்தகுமார், செங்கல்பட்டு மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி தி.சினேகா, கூட்டுறவு சங்கங்களின் பதிவாளர் (நுகர்வோர் பணிகள்) மரு. மு.வீரப்பன் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

---

## உள்ளத்தில் பொங்கும் மகிழ்ச்சி; இல்லத்தில் கொண்டாட்டமாக நிறையும்!

# முதல்வர் மு.க.ஸ்டாலினுக்கு மனமார்ந்த நன்றி!

## பொங்கல் தொகுப்பு பெற்ற பொதுமக்கள் மகிழ்ச்சி மழையில் வாழ்த்து!

**தமிழர் திருநாளாம் பொங்கல் திருநாளை முன்னிட்டு, பொதுமக்களுக்கு சர்க்கரை, அரிசி, கரும்பு மற்றும் ரொக்கம் ரூபாய் 3000 வழங்கும் மகத்தான திட்டத்தினை முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று காலை ஆலந்தூரில் தொடங்கி வைத்தார்.**

**பொங்கல் பரிசுத் தொகுப்பு மற்றும் ரொக்கம் 3000 ரூபாய் பெற்ற பொதுமக்கள் குறிப்பாக தாய்மார்கள் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களுக்கு பாராட்டுக்களையும் மனமார்ந்த நன்றியையும் முகத்தில் மகிழ்ச்சி பொங்கிட தெரிவித்த காட்சியை செய்தியாக வெளியிட்டுள்ளோம்.**

அது வருமாறு:-



**திலகம் (தஞ்சை)** : பொங்கல் பரிசுத் தொகுப்பு கொடுத்து இருக்கிறார்கள் மிகுந்த சந்தோஷமாக இருக்கிறது. வேஷ்டி, சேலை, ரொக்கப் பணம் 3000 ரூபாய், அரிசி, கரும்பு, சர்க்கரை என்று எல்லாமே கொடுத்து இருக்கிறார் முதல்வர். பொதுமக்களுக்கு ரொம்ப உபயோகமாக இருக்கும். இது எல்லோருக்குமே சந்தோஷம்.

**நாகேஸ்வரி (தஞ்சை):** பொங்கலுக்காக ஒரு கிலோ அரிசி, ஒரு கிலோ சர்க்கரை, கரும்பு, 3000 ரூபாய் ரொக்கப் பணம் அய்யா முதல்வர் அவர்கள் கொடுத்திருக்கிறார். இதனாலே கஷ்டப்படுகிற மக்கள் எல்லாம் நல்லா பயன்பெறுகிறார்கள். இந்தப்



பொங்கலை நாங்கள் சந்தோஷமாக கொண்டாடுவோம். இந்த ஆண்டு நல்லா இருக்கும். மீண்டும் அய்யா அவர்கள் ஆட்சிக்கு வருவாங்கன்னு நான் வாழ்த்துகிறேன். எங்களுடைய பிள்ளைதான் அவர். அவரை நான் மீண்டும் வாழ்த்துகிறேன்.

**சுசிலா (தஞ்சை):** (ஒரு முழு கரும்பை கையில் ஏந்தியவாரே சந்தோஷத்துடன் கூறுகிறார்) பொங்கலுக்காக எல்லாமே மக்களுக்காக செய்கிறார். இவையெல்லாம் ரொம்ப சந்தோஷமாக இருக்கிறது.



ரூபாய் 3000 கொடுத்து இருக்கிறார். நல்லபடியாக அடுத்த முறையும் வருவார். எங்களுக்கெல்லாம் ரொம்ப சந்தோஷம்.

**திவ்யா (நெல்லை)** பொங்கலுக்காக சிறப்பு தொகையாக ரூபாய் 3000 கொடுத்து இருக்கிறார். கஷ்டப்படுகிற எல்லோருக்குமே இதனை யூஸ் செய்து கொள்ளலாம். இந்த பொங்கலை கொண்டாடிட இந்த முறை யாரிடமும் கடன் வாங்க வேண்டிய அவசியமில்லை. இந்த பொங்கலுக்கு கரும்பு, சர்க்கரை, அரிசி மட்டுமில்லாமல் ரொக்கம் மூவாயிரம் கொடுத்து இருப்பதினால் எங்களை மாதிரி கஷ்டப்படுகிற பேமிலிக்கு இந்தப் பொங்கல் சந்தோஷமான பொங்கலாக இருக்கும், சிறப்பான பொங்கலாகவும் இருக்கும்.



இந்தப் பொங்கலுக்காக ரூபாய் 3000 கொடுத்தது எங்களுக்கு நல்ல உதவியாக இருக்கிறது. அதுமட்டுமல்லாமல் பச்சரிசி, சர்க்கரை, கரும்பு கொடுத்ததினால் இது எங்களுக்கு உதவிகரமாக இருக்கிறது. பொங்கலுக்காக எங்களுக்கு 3000 ரூபாய் கொடுத்த முதலமைச்சருக்கு நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.



**முத்துலட்சுமி (திருச்செந்தூர்):** தமிழக முதல்வர் அவர்கள் பொங்கலை முன்னிட்டு 3000 ரூபாய் ரொக்கத் தொகையும் பரிசுத் தொகுப்பும் இன்று வழங்கி இருக்கிறார்கள். அது எங்களுக்கு மிகுந்த சந்தோஷமாக இருக்கிறது. இந்த பொங்கலை நாங்கள் சிறப்பாக கொண்டாடிட உதவிய முதல்வருக்கு மிகுந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். தமிழக முதல்வர் அவர்கள் எங்களுக்கு பொங்கல் பரிசுத் தொகையாக 3000 ரூபாயும், பச்சரிசி, சீனி, கரும்பு இதையெல்லாம் எங்களுக்கு தந்திருக்கிறார்கள். பொங்கல் கொண்டாடிட எங்களுக்கு ரொம்ப வசதியாக இருக்கும். முதல்வர் அவர்களுக்கு ரொம்ப நன்றி.



**முருகேஸ்வரி (திருச்செந்தூர்):** (முழு கரும்பை கையில் ஏந்தியவாரே பேட்டியளிக்கிறார்) முதல்வர் அவர்கள் ரொக்கம் 3000, பொங்கல் பரிசு தொகுப்பு கொடுத்ததற்கு முதலில் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். எங்களை மாதிரி இருக்கின்ற ஏழை எளிய மக்களுக்கு மிகவும் பயனுள்ளதாக இருக்கும். ரொம்ப சந்தோஷமாக இருக்கிறோம். முதல்வருக்கு நன்றி.



**காஞ்சனா (சோழிங்க நல்லூர்):** (ஒருமுழு கரும்பை கையில் ஏந்தியவாரே மகிழ்ச்சியுடன் கூறுகிறார்) மாசம், மாசம் ஆயிரம் ரூபாய் கொடுப்பதோடு இப்போது இந்த மாதம் அதோடு சேர்த்து 3000 ரூபாயும் பொங்கலுக்கு ரொக்கமாக கொடுத்தது ரொம்ப சந்தோஷமாக இருக்கிறது. எங்கள் முதல்வருக்கு ரொம்ப ரொம்ப நன்றி சொல்ல நாங்கள் கடமைப்பட்டு இருக்கிறோம். இந்த வருஷம் பொங்கலை நாங்கள் ரொம்ப ஹாப்பியாக கொண்டாடுவோம். ரொம்ப ரொம்ப சந்தோஷமாக இருக்கிறது எல்லோருக்குமே. முதல்வருக்கு நன்றி.



**ஜெயலட்சுமி (சோழிங்க நல்லூர்):** நன்றிங்க, முதல்வருக்கு மிக்க நன்றி. மூவாயிரம் ரூபாய் கொடுத்து இருக்கிறார் முதல்வர். எனக்கு ரொம்ப சந்தோஷமா இருக்கு. முதல்வருக்கு ரொம்ப நன்றி. அனைத்து மந்திரிகளுக்கும் ரொம்ப நன்றி.



**இலஞ்சியா (சேலம்):** இதில் கிறிஸ்தவர்களும் இருக்கிறார்கள், இஸ்லாமியர்களும் இருக்கிறார்கள், இந்துக்களும் இருக்கிறார்கள். நாங்கள் எல்லாம் சமத்துவமாக சமத்துவ பொங்கலை கொண்டாடுகிறோம். இந்த சமத்துவ பொங்கலை கொண்டாடுவதற்கு அய்யா எங்களுக்கு உதவி செய்திருக்கிறார். அய்யாவுக்கு ரொம்ப நன்றி.

**சுபா (சேலம்):** இந்த பொங்கலுக்கு சாதாரண குடும்பமாக இருந்தால் சற்று குறைந்த செலவு ஆகும். பெரிய குடும்பமாக இருந்தால் சற்று செலவு அதிகமாகும். பொங்கலுக்கு எல்லோருமே ஊர் உலகத்தில் இருந்தெல்லாம் வருவாங்க. இந்தத்தொகையை வைத்து சிறப்பாக பொங்கலை கொண்டாடலாம். சந்தோஷமாக பிள்ளைகளோடு இருக்கலாம். ரொம்ப மகிழ்ச்சி முதல்வர் அய்யா கொடுத்ததற்கு ரொம்ப மகிழ்ச்சி. ரொம்ப ரொம்ப நன்றிங்க.

**சுதித்ரா (சேலம்)** பொங்கல் பண்டிகைக்காக எங்களுக்கு கொடுத்திருப்பதற்கு முதல்வருக்கு ரொம்ப நன்றி. என்னைப் போன்ற மிடில்கிளாஸ் பேமிலிக்கு இந்த பொங்கல் தொகுப்பு, ரொக்கம் மிகவும் யூஸ்புல்லா இருக்கும். இந்த பண்டிகைக்கு வேண்டியவற்றையெல்லாம் இதில் வாங்கிக் கொள்வோம். இந்த பொங்கல் திருநாளை முதல்வர் அவர்களால் நாங்கள் நல்லபடியாக கொண்டாடுவோம்.

**இவ்வாறு அனைத்துத்தரப்பு பெண்களும் முகத்தில் மகிழ்ச்சி பொங்க முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களுக்கு தங்களது நெஞ்சார்ந்த நன்றியை தெரிவித்துக் கொண்டனர்.**